தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 11, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, சனவரி 24, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்."

நல்ல அறிஞர்கள் கூடியிருக்கும் அவையில் நல்ல பொருளை, கேட்பவர் மனத்தில் பதியுமாறு சொல்ல முடியாதவர் பல நூல்களைக் கற்றாலும் பயனில்லாதவரே.

1. இரங்கல் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எஸ்.சி. பாலகிருட்டிணன் அவர்கள் 13-11-1989 ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.சி. பாலகிருட்டிணன் அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டுவரை பழனி பொது கிராமப் புற ஷெட்யூல்டு வகுப்புத் தொகுதியிலிருந்தும் மற்றும் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை நிலக்கோட்டை, கொடைக் கானல் மற்றும் பழனி கிராமப்புறத் தொகுதியிலிருந்தும் அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை மூன்று முறை தொடர்ந்து பாராளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்

1—

அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் கலைக்கல்லூரி மாணவியர் விடுதி

வினா எண். 696 திரு. என். பழனிவேல்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் கலைக்கல்லூரி மாணவியர் தங்கும் விடுதி கட்டும் பணி நிறைவு பெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் முடித்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி மாணவியர் தங்கும் விடுதி கட்டும் பணி தொடரப் பெற்று 30—6—1989-க்குள் முடிவு பெற்று விடும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

2—

திருமங்கலம்—விக்கிரமங்கலம் நகரப்பேருந்து

வினா எண் 749 திரு. பி.என் வல்லரசு: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருமங்கலத்திலிருந்து செக்கானூரணி-கண்ணனூர் நடுமுதலைக்குளம்-கீழப்பட்டி வழியாக விக்கிரமங்கலத்திற்கு நகரப்பேருந்து விடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

திருமங்கலத்திலிருந்து செக்கானூரணி கண்ணனூர் நடுமுதலைக்குளம் கீழப்பட்டி வழியாக விக்கிரமங்கலத்திற்கு நகரப் பேருந்து 5—7—89 தேதியிலிருந்து இயக்கப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS